தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின்
செயல்முறைகள் சென்னை–6
ந.க.எண். 055617 / சி3 / இ1 / 2018 நாள். 20–09–2018

பொருள்: பள்ளிக் கல்வி – 2018–19ம் ஆண்டில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை அரசு உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது – புதியதாக தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு ஆசிரியர் பணியிடங்கள் ஈர்த்து ஆணை வழங்குதல் சார்பாக அறிவுரை வழங்குதல் சார்பு.

பார்வை:
1) அரசாணை(நிலை)எண்.165 பள்ளிக் கல்வித் (அஇ2) துறை நாள்.07.08.2018
2) பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை 6 அவர்களின் ந.க.எண்.18618/இ1/2018 நாள்.09.08.2018

*********

பார்வை–1ல் கண்ட அரசாணையில் 2018–19ம் கல்வி ஆண்டில் 95 ஊராட்சி ஒன்றிய / நகராட்சி நடுநிலைப் பள்ளிகளை அரசு / நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியும், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து 6–10 வகுப்பு வரை உள்ள மாணவிகளைப் பிரித்து 5 பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் ஆக மொத்தம் (95+5) 100 பள்ளிகளின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் பார்வை–2ல் காணும் இவ்வியக்கக பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

2018–19ம் கல்வி ஆண்டில் புதியதாக தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு ஆசிரியர் பணியிடங்களை எவ்வாறு பூர்த்தி செய்து கொள்வது என்பது குறித்து பார்வை–1ல் காணும் அரசாணையில் பத்தி 3(iii)ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 2018–19ம் கல்வி ஆண்டில் புதியதாக தரம் உயர்த்தப்பட்ட 95 பள்ளிகளுக்கு பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு (துறை ஒரு பாடம்) ஏற்கனவே அந்நடுநிலைப் பள்ளியில் 6–8 வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அரசால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் பணிபுரிந்து வரும் பட்டதாரி ஆசிரியர்களில் விருப்பத்தின் பேரில் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு (புதியதாக தரம் உயர்த்தப்பட்ட அ.உ.நி.) பணிபுரிய சம்மதம் தெரிவிக்கும் பட்டதாரி ஆசிரியர்களை பணியிடத்துடன் ஈர்த்து ஆணை வழங்கிடுமாறும், அவ்வாறு விருப்பம் தெரிவிக்காத பட்சத்தில் பணியிடத்தினை மட்டும் ஈர்த்து ஆணை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

www.Padasalai.Net

மேலும் அப்பள்ளியில் (நடுநிலைப் பள்ளி) இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் 6–8 வகுப்புகளுக்கு அனுமதிக்கப்பட்டிருப்பின் பணியிடத்தினை (Post Without Person) மட்டும் ஈர்த்துக்கொள்ளப்படவேண்டும். அப்பணியிடத்தில் பணிபுரிந்து வந்த இடைநிலை ஆசிரியர்களை அதே ஒன்றியத்தில் காலியாகவுள்ள தொடக்க/நடுநிலைப் பள்ளிகளுக்கு மாறுதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

இதன் தொடர்ச்சியாக மேற்காண் 95 பள்ளிகளுக்கு (தரம் உயர்த்தப்பட்ட அ.உ.நி.ப) பணியிடங்களை ஈர்த்து கொண்டது போக (குறைந்தபட்சம் 3 பணியிடங்கள்) மீதம் பணியிடங்கள் தேவைப்படும் பட்சத்தில் அப்பணியிடங்களை பணிநிரவல் மூலம் பூர்த்தி செய்து கொள்வது குறித்தும், மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிர் உயர்நிலைப் பள்ளியாக தனியாக பிரித்து தொடங்கப்படும் 5 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் பின்னர் தனியாக அறிவுரை வழங்கப்படும் என அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

மேலும் இப்பணிகளை எவ்வித புகாருக்கும் இடமளிக்கா வண்ணம் செய்து முடித்து அதன் விவரங்களை (ஈர்த்து ஆணை வழங்கப்பட்ட விவரம்) இவ்வியக்கக சி3 பிரிவிற்கு உரிய விவரங்களுடன் ஒவ்வொரு பள்ளிவாரியாக கீழ்க்கண்ட படிவத்தில் 27.06.2018க்குள் அனுப்பி வைத்திட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

படிவம்

மாவட்டத்தின் பெயர்:

| வ.எண் | புதியதாக தரம் உயர்த்தப்பட்ட அ.உ.நி.ப பெயர் | நடுநிலையிலிருந்து ஈர்த்து ஆணை வழங்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | பாடம் (பட்டதாரி / இடைநிலை) | அனுமதிக்கப்பட்ட பணியிடத்தின் அரசாணை எண்ணினை குறிப்பிடவும் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

பள்ளிக் கல்வி இணை இயக்குநர்
(பணியாளர் தொகுதி)

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
(மின்னஞ்சல் மூலமாக)

www.Padasalai.Net